2025 – மே மாதம் 20– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 178 / 2023*

*2025–ம் ஆண்டு மே மாதம் 20– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய R W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | R W 1, சாரதா |
| கணவர் பெயர் | : | பன்னீர்செல்வம் |
| ஊர் | : | பெரம்பலூர் |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | உதவியாளர் |
| வயது | : | 57 |

**தேதி: 20.05.2025.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது பெரம்பலூர் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகின்றேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சாட்சியம் அளிக்க எனக்கு வழங்கப்பட்ட அங்கீகாரக்கடிதம் **எ.சா.ஆ.1,** 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் உண்மை நகல் **எ.சா.ஆ.2,** 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் தகுதிச்சான்று குறித்த அறிக்கை கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட உண்மை நகல் **எ.சா.ஆ.3,** மனுதாரர் ஓட்டிச்சென்ற T N 46 V 6913 என்ற மோட்டார் சைக்கிளை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் உண்மை நகல் **எ.சா.ஆ.4,** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. எ.சா.ஆ.2 ஆவணத்தில் 06.05.2022–ம் தேதியன்றே தகுதிச்சான்று முடிவடைந்து விட்டதாக குறிப்பு உள்ளது. விபத்து தேதியானது 20.02.2023 ஆகும். அன்றைய தேதியில் தகுதிச்சான்று நடப்பில் இல்லை. எ.சா.ஆ.3 ஆவணத்தின் படி 20.03.2023–ம் தேதியன்று தான் தகுதிச்சான்று

புதுப்பிக்கப்பட்டுள்ளது. 06.05.2022 முதல் 20.03.2023 வரையிலான காலத்திற்கு தகுதிச்சான்று நடப்பில் இல்லை.

**குறுக்கு விசாரணை (மனுதாரர் தரப்பில்):–**

(மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை என்பதால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது).

**ஒப்பம்/– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**